**கண்டி எசல பெரஹரா பொறுப்பு - 2025**

**--------------------------------------------**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கண்டி எசல பெரஹரா பொறுப்பின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹரா பொறுப்பு சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்கள் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவையென நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாதபோது செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நம்பிக்கைப் பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பொறுப்பின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது

கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்;

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானஙளுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 137 மற்றும் 138 | மீளாய்வாண்டில் எசல பெரஹரவின் எரிபொருள், சிற்றுணவு மற்றும் ஏனைய செலவினங்களுக்காக பெற்றுக்கொண்ட ரூபா 80,000 இற்குரிய முற்பணத்தை தீர்வு செய்வதற்கு உரிய 02 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் அங்கீகரிக்கப் படாமலும் ரூபா 3,000,000 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று சான்றுறுதிப்படுத்தாமலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தற்போது உத்தி யோகத்தர்களின் கையொப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டு சான்றுறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக | நிதிப் பிரமாணம் 137 மற்றும் 138 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 (அ) ஆம் பந்தி | நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு அதன் நிர்வாக அதிகாரி மற்றும் அமைச்சு செயலாளரால் அதற்கு முன்னைய ஆண்டின் செப்டம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் உரிய கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு செப்டம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் ரூபா 21,198,125 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | எசல பெரஹர பொறுப்பு திட்டவட்டமான வரிசை அமைச்சொன்றுக்கு உரித்தானது என சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதால் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள முடியா தெனவும் எந்த ஒரு அமைச்சிலிருந்தும் அல்லது திணைக்களத்தில் இருந்தும் எசல பெரஹர பொறுப்பிற்கு வருடாந்த நிதி ஏற்பாடு ஒன்றோ மேற் கொள்ளப்படாததால் மதிப்பீட்டை எசல பெரஹர பொறுப்பினால் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து அதன் பிரகாரம் உரிய செலவினம் மேற்கொள்ளப்பட்டுள் ளதாக. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் PF/423 இன் அறிவுறுத்தலி ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,867,245 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,622,410 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,244,835 ஆன அததிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இதற்காக ஆசனங்களை வழங்கும் வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தன

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெரஹரவில் பங்கேற்ற சிறந்த நடனக் கலைஞர்களை கௌரவிப்பதற்காக ரூபா. 342,000 செலவில் 6 தொகுதி ஆடைகள் கட்டளை இடப்பட்டு, 2025 செப்டம்பர் 18 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும், அவற்றை கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 24 ஆந் திகதி வரையிலும் தேவையான | இரண்டு தொகுதி ஆடைகள் தற்போது பெரஹர பொறுப்பின் பாதுகாப்பில் இருப்பதாகவும், அவற்றை வழங்குவதற்குள்ள இரண்டு கலைஞர்களை பெயரிடுவதில் சிக்கலொன்று காணப்படுவதால் வழங்கப் படவில்லை என்றும், இது | பொறுப்பின் நோக்கங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கலைஞர்களுக்கு வழங்கப்படாமல் குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன. | தொடர்பாக எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பொறுப்பின் முதலாவது கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு, அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக. | |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1. வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2020/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வண்டின் செயலாற்றல் அறிக்கை 2026 மார்ச் 04 ஆந் நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வில்லை. மேலும் நிதிப் பிரமாணம் 877(2)(உ) பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கை கணக்காய்வு செய்யப்பட்டு வழங்கப்படும் கணக்காய்வ அறிக்கையையும் உள்ளடக்கி வருடாந்த செயலாற்றல் அறிக்கை உரிய ஏற்பாடுகளின் கீழ் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் நிறைவடைவதற்கு முன்னர் சபையில் முன்வைப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டின் அறிக்கை 2026 மார்ச் 24 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எசல பெரஹர பொறுப்பு திட்டவட்டமான வரிசை அமைச்சொன்றுக்கு உரித்தானது என சட்டத்தில் குறிப்பிடப்படாமையால் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள முடியாததால் அது தொடர்பாக எதிர்வரும் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டு உரிய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டு எதிர்வரம் காலங்களில் தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி நிர்வாக பொறுப்புக் கூறல் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டும். |